**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆலங்குளம்**

**முன்னிலை: திருமதி.மோ.விஜயா, பி.ஏ, பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

ஆலங்குளம்.

2026-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 06-ம் நாள், வியாழக்கிழமை

**அ.வ.எண்.531/2022**

**in**

**CNR.No.TNTSOC-001189-2022**

காசிநாதபுரம்,

ஸ்ரீவைகுண்டம் சுடலை மாடசாமி கோவில்,

அதன் தற்போதைய தர்மகர்த்தா,

செந்தில்நாதன் மூலம், ... வாதி

//எதிர்//

1. கண்ணன்

2. தமிழ்நாடு அரசு அதன் தென்காசி மாவட்ட ஆட்சியர்,

3. வட்டாட்சியர், ஆலங்குளம்.

4. சார்பதிவாளர், ஆலங்குளம். ...பிரதிவாதிகள்

இவ்வழக்கானது தென்காசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.73/2020-ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வந்த நிலையில், திருநெல்வேலி முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் 17.03.2022-ம் தேதியிட்ட செயல்முறை ஆணை எண்.A.No.182/2022-ன் படி இவ்வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாற்றலாகி அ.வ.எண்.531/2022-ஆக இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.N.மாரித்துரை** அவர்கள் ஆஜராகியும், 1-ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.D.செல்வகுமார்** அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும் வந்த நிலையில், கடந்த

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:16:32 +0530

16.07.2026-ம் தேதியன்று வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், கடந்த 21.07.2026-ம் தேதியன்று 1-ம் பிரதிவாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்றத்தின் ஆழ்ந்த பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

வாதியால் இவ்வழக்கானது, 1-ம் பிரதிவாதி 28.01.2015-ம் தேதியன்று 4-ம் பிரதிவாதி அலுவலகத்தில் காசிநாதபுரம் ஸ்ரீவைகுண்டம் சுடலை ஆண்டவர் கோவில் டிரஸ்ட் என்று பதிவு செய்துள்ள ஆவண எண்.1/2015-ஆனது வாதி கோவில் நிர்வாகத்தையோ, அதன் அசையும், அசையா சொத்துக்களையோ வழிபாடு முறைகளையோ எந்த வகையிலும் கட்டுப்படுத்தக்கூடியதல்ல மற்றும் அடி முதலே செல்லாது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் வழங்கக் கேட்டும், 1-ம் பிரதிவாதி 02.07.2015-ம் தேதியன்று 4-ம் பிரதிவாதி அலுவலகத்தில் காசிநாதபுரம் சுடலைமாடன் கோவில் டிரஸ்ட் என்று பதிவு செய்துள்ள ஆவண எண்.3533/2015-ஆனது வாதி கோவில் நிர்வாகத்தையோ, அதன் அசையும், அசையா சொத்துக்களையோ வழிபாடு முறைகளையோ எந்த வகையிலும் கட்டுப்படுத்தக்கூடியதல்ல மற்றும் அடி முதலே செல்லாது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் வழங்கக் கேட்டும், மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகை பிரதிவாதிகளிடமிருந்து வாதிக்கு கிடைக்கும் படிக்கு உத்தரவிடக்கேட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராதின் சுருக்கம்:-**

காசிநாதபுரம் கிராமத்தைச் சார்ந்த பொன்பெருமாள் நாடார் குடும்பம், குத்தாலிங்க நாடார் குடும்பம், கசமுத்து நாடார் குடும்பம், வைரக்கண் நாடார் குடும்பம், மாடசாமி நாடார் குடும்பம், வெள்ளைகாரன் என்ற சுடலையாண்டி நாடார் குடும்பம், அய்யாதுரை என்ற அப்பாதுரை நாடார் குடும்பம், மாடக்கண் நாடார் குடும்பம் மற்றும் கசமுத்து நாடார் குடும்பம்

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:16:47 +0530

ஆகிய 9 குடும்பத்தினரின் மூதாதையரால் சுமார் 150 வருடங்களுக்கு முன்பு ஸ்ரீவைகுண்டத்திலிருந்து பிடிமண் எடுத்து வந்து காசிநாதபுரத்தில் சுடலைமாடன் கோவிலை நிர்மானித்துள்ளார்கள். மேற்படி 9 குடும்ப வகையறாக்களில் பொன்பெருமாள் நாடார் குடும்பம், கசமுத்து நாடார் குடும்பம், மாடக்கண் நாடார் குடும்பம், அப்பாத்துரை நாடார் குடும்பம் ஆக 4 குடும்பங்கள் ஆதியில் கிடையாது. எஞ்சிய 5 குடும்பத்திலிருந்து பிறந்து வெளியிடங்களுக்கு திருமணம் செய்து கொடுத்த பெண் வம்சாவழியினருக்காக பொன்பெருமாள் நாடார் குடும்பம் தோன்றியுள்ளது. அது தற்பொழுது புலமாடநாடார் என்று அழைக்கப்படுகிறது.

மேற்படி கோவிலில் 100 ஆண்டுகளுக்கும் மேலாக ஆவணி மாதம் கடைசி வெள்ளி கொடை விழா நடந்து வருகிறது. மேற்படி கோவிலிலுள்ள உள்ள ஏழு தெய்வங்களான சிவணைந்த பெருமாள், பார்வதி, சுடலைமாடன், பேச்சியம்மாள், முண்டன், கருப்பசாமி, சின்னத்தம்பி ஆகிய தெய்வங்கள் இருந்து வருவதில் கசமுத்து நாடார் குடும்பம் சிவணைந்த பெருமாளுக்கும், மாடசாமி நாடார் வகையறா, பார்வதிக்கும், குத்தாலிங்க நாடார் வகையறா சுடலைமாடனுக்கும், சுடலைமுத்து நாடார் வகையறா கருப்பசாமிக்கும் மற்றொரு கசமுத்து வகையறா சின்னத்தம்பிக்கும் சாமியாடிகளாக நாளதுவரை இருந்து வருகிறார்கள்.

இந்நிலையில் 1-ம் பிரதிவாதி கடந்த 2015-ம் ஆண்டு முதல் கோவில் நிர்வாகத்தில் தர்மகர்த்தா மூலம் எடுக்கும் முடிவுகளிலிருந்து முரண்பட்டு, ஆதரவாக புலமாடன் குடும்பத்தினரை தன்னுடன் சேர்த்துக்கொண்டு பிரச்சனை செய்து 2015-ம் ஆண்டு முதல் ஆவணி மாதம் கடைசி வெள்ளியில் நடக்கும் கொடைவிழாவிலிருந்து தங்களை விலக்கி கொண்டார்கள். மேலும், மேற்படியார்கள் நிர்வாகத்தின் அனுமதியின் படி ஒவ்வொரு பங்குனி மாதமும் 3-ம் செவ்வாய் கிழமை பூஜை வைத்து தனித்து வழிபாடு செய்து வருகிறார்கள்.

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:17:00 +0530

மேற்படி புலமாடன் குடும்பத்தைச்சார்ந்த 1-ம் பிரதிவாதி தன்னிச்சையாக கடந்த 28.01.2015-ம் தேதியன்று 4-ம் பிரதிவாதி அலுவலகத்தில் காசிநாதபுரம் ஸ்ரீவைகுண்டம் சுடலை ஆண்டவர் கோவில் டிரஸ்ட் என்று பதிவு செய்துள்ள ஆவண எண்.1/2015 மற்றும் கடந்த 02.07.2015-ம் தேதியன்று 4-ம் பிரதிவாதி அலுவலகத்தில் காசிநாதபுரம் சுடலைமாடன் கோவில் டிரஸ்ட் என்று பதிவு செய்துள்ள ஆவண எண்.3533/2015-ஆவணத்தை 4-ம் பிரதிவாதி முறையாக விசாரிக்காமல் மேற்படி ஆவணங்களை பதிவு செய்துள்ளார்.

அதற்காக 2-ம் பிரதிவாதி அலுவலகத்தில் 14.02.2018-ம் தேதியன்று நடைபெற்ற சமாதான கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி புலமாடன் நாடார் குடும்பத்தினரைத் தவிர மற்றவர்கள் அ-பிரிவாக இருந்து ஒவ்வொரு ஆண்டும் ஆவணி மாதமும், புலமாடன் நடார் குடும்பத்தினர் ஆ-பிரிவாக இருந்து பங்குனி மாதமும் திருவிழாவை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 1-ம் பிரதிவாதி ஏற்படுத்திய ஆவணங்களை புல மாடன் குடும்பத்தினர் அவர்களாகவே ரத்து செய்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. 1-ம் பிரதிவாதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் Cr.O.P.(MD).No.13418/2019 என்ற மனுவை தாக்கல் செய்ததில் 2,3 எதிர்மனுதாரர்களிடம் முறையிடுமாறு மனு முடிக்கப்பட்டுள்ளது. 1-ம் பிரதிவாதி ஏற்படுத்தி வைத்துள்ள இரண்டு டிரஸ்ட் ஆவணங்களை வைத்து, வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துகளில் 4-ம் பிரதிவாதி அலுவலகத்திலிருந்து உரிமை மாற்ற ஆவணங்கள் ஏற்படுத்தவும், 3-ம் பிரதிவாதி மூலம் வாதி பெயரிலுள்ள பட்டாவை பெயர் மாற்றம் செய்யவும் முயற்சி செய்து வருகிறார்கள்.

எனவே, வாதியால் இவ்வழக்கானது, 1-ம் பிரதிவாதி 28.01.2015-ம் தேதியன்று 4-ம் பிரதிவாதி அலுவலகத்தில் காசிநாதபுரம் ஸ்ரீவைகுண்டம் சுடலை ஆண்டவர் கோவில் டிரஸ்ட் என்று பதிவு செய்துள்ள ஆவண எண்.1/2015-ஆனது வாதி கோவில் நிர்வாகத்தையோ, அதன் அசையும், அசையா சொத்துக்களையோ வழிபாடு

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:17:16 +0530

முறைகளையோ எந்த வகையிலும் கட்டுப்படுத்தக்கூடியதல்ல மற்றும் அடி முதலே செல்லாது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் வழங்கக் கேட்டும், 1-ம் பிரதிவாதி 02.07.2015-ம் தேதியன்று 4-ம் பிரதிவாதி அலுவலகத்தில் காசிநாதபுரம் சுடலைமாடன் கோவில் டிரஸ்ட் என்று பதிவு செய்துள்ள ஆவண எண்.3533/2015-ஆனது வாதி கோவில் நிர்வாகத்தையோ, அதன் அசையும், அசையா சொத்துக்களையோ வழிபாடு முறைகளையோ எந்த வகையிலும் கட்டுப்படுத்தக்கூடியதல்ல மற்றும் அடி முதலே செல்லாது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் வழங்கக் கேட்டும், மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகை பிரதிவாதிகளிடமிருந்து வாதிக்கு கிடைக்கும் படிக்கு உத்தரவிடக்கேட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **1-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்**:-

வாதியின் வழக்கு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. வாதி பிராதில் கேட்கும் பரிகாரங்கள் எதுவும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல. இவ்வழக்கில் காசிநாதபுரம், ஸ்ரீவைகுண்டன் சுடலை மாடசாமி கோவிலின் தர்மகர்த்தா வாதி செந்தில்நாதன் கிடையாது. வாதி தான் தர்மகர்த்தா என்பதற்கு எவ்வித ஆவணமும் மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், பிரநிதித்துவ வழக்கு தாக்கல் செய்ய வேண்டுமெனில் வாதிக்கு இவ்வழக்கு சுடலைமாடசாமி கோவிலின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் கோமரத்தார்கள் இணைந்து தீர்மானம் நிறைவேற்றி அதடிப்படையில் வாதிக்கு அதிகாரம் வழங்கியிருக்க வேண்டும். மேலும், 2 முதல் 4 பிரதிவாதிகள் இவ்வழக்கில் தேவையில்லாத தரப்பினர்கள் ஆவார்கள்.

இவ்வழக்கு சுடலைமாடசாமி கோவிலானது 1-ம் பிரதிவாதியின் மூதாதையரால் நான்கு தலைமுறைகளுக்கு முன்னரே நிர்மானிக்கப்பட்டு இரண்டு

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:17:32 +0530

தலைமுறையினருக்கு முன்னர் கோவில் கட்டுமான பணிகள் கட்டி முடிக்கப்பட்டு நாளது தேதி வரையில் 1-ம் பிரதிவாதியின் குடும்பத்தை சார்ந்தவர்களே நிர்வாகிகளாக இருந்து கோவில் நிர்வாகத்தினை நடத்தி வந்துள்ளார்கள். இந்நிலையில் வழக்கு கோவிலின் முக்கிய தெய்வமான சுடலைமாடசாமிக்கு 1-ம் பிரதிவாதியின் மூதாதையர்களையடுத்து 1-ம் பிரதிவாதியின் தலைமுறையில் மட்டும் யாரும் சாமியாடாத நிலையில் வாதி வகையாட்கள் இடைப்பட்ட காலகட்டத்தில் சாமியாடிவந்த நிலையிலும் கடந்த 2018-ம் ஆண்டு 1-ம் பிரதிவாதியின் புலமாடன் குடும்பத்தை சார்ந்த 1-ம் பிரதிவாதியின் சகோதரர் மகனான அருள்மணி சாமியாடிய காரணத்தால் வாதி வகையாட்கள் அவரை சாமியாடக்கூடாது என்று 1-ம் பிரதிவாதியிடம் பிரச்சனை செய்துள்ளார்கள். ஆகையால் 1-ம் பிரதிவாதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் Cr.O.P.(MD).No.13418/2019 என்ற மனுவை தாக்கல் செய்து மேற்படி மனுவானது 1-ம் பிரதிவாதிக்கு ஆதரவாக உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2018-ம் ஆண்டு 2-ம் பிரதிவாதி அலுவலகத்தில் சமாதான கூட்டம் நடத்தி வாதி வகையாட்கள் ஆண்டு தோறும் ஆவணி மாதமும், 1-ம் பிரதிவாதி வகையாட்கள் பங்குனி மாதமும் கோவில் கொடை விழா நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி நாளது தேதி வரை அவ்வாறே திருவிழா நடத்தப்பட்டு வருகிறது. 1-ம் பிரதிவாதி தனிநபர் நிலையில் மேற்படி ஆவணங்களை உற்பத்தி செய்யவில்லை. அதற்கான அவசியமும் 1-ம் பிரதிவாதிக்கு ஏற்படவில்லை. 1-ம் பிரதிவாதியால் உருவாக்கப்பட்ட டிரஸ்ட் ஆவணத்தால் வாதிக்கோ, அவரது வகையாட்களுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை. எனவே, வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று 1-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:17:54 +0530

**4. 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:-**

வாதியின் வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. வாதி பிராதில் கேட்கும் பரிகாரங்கள் எதுவும் வாதிக்கும் கிடைக்கக்கூடியதல்ல. வாதி அசல் வழக்கை தகுந்த ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள். எனவே, வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**5.** இவ்வழக்கில் வாதியின் வழக்குரை மற்றும் பிரதிவாதியின் எதிர்வழக்குரையின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தால் கீழ்க்காணும் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன:-

**எழுவினாக்கள்:-( 03.03.2025)**

i) ஆலங்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆவண எண்.1/2015-ஐ பொறுத்து வாதி கேட்கும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

ii) ஆலங்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆவண எண்.3533/2015-ஐ பொறுத்து வாதி கேட்கும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

iii) இதர பரிகாரங்கள் என்ன?

**6. வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-**

இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி செந்தில்நாதன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, சர்வே எண்.130/10-க்கான நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேடு உண்மை நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 28.01.2015-ம் தேதியிட்ட Trust Deed உண்மை நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 02.07.2015-ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகவும்,

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:18:05 +0530

14.02.2018-ம் தேதியிட்ட ஆலங்குளம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடந்த சமாதான கூட்ட தீர்மானத்தின் உண்மை நகல் வா.சா.ஆ.4 ஆகவும், விசாரணை அறிவிப்பு நகல் வா.சா.ஆ.5 ஆகவும், புல எண்.130/10-க்கு வழங்கப்பட்டுள்ள பட்டாவின் உண்மை நகல் வா.சா.ஆ .6 ஆகவும், 25.09.2019-ம் தேதியில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின் கணினி நகல் வா.சா.ஆ.7 ஆகவும், 03.02.2018-ம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.8 ஆகவும், 03.02.2018-ம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.9 ஆகவும், 06.05.2015, 26.05.2015-ம் தேதியிட்ட 1-ம் பிரதிவாதி ஆலங்குளம் சார்பதிவாளருக்கு கொடுத்த தடங்கல் மனுக்கள் நகல்கள் வா.சா.ஆ.10 ஆகவும், 20.11.2025-ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழின் கணினி நகல் வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**7. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-**

பிரதிவாதிகள் தரப்பில் 1-ம் பிரதிவாதி கண்ணன் பி.வா.சா.1 ஆகவும், சுரேஷ் என்பவர் வா.சா.2 ஆகவும், கோயில் செல்வராஜ் என்பவர் வா.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டு, ச.எண்.130/10-க்கு வழங்கப்பட்டுள்ள நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேடு உண்மை நகல் பி.வா.சா.ஆ.1 ஆகவும், 02.07.2015-ம் தேதியிட்ட அறக்கட்டளை பதிவு ஆவணம் அசல் பி.வா.சா.ஆ.2 ஆகவும், மின் இணைப்பு ரசீதுகள் (2 எண்ணம்) அசல் பி.வா.சா.ஆ.3 ஆகவும், தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து கடந்த 2001-ம் வருடம் ஜீலை மாதம் அனுபப்பட்ட அறிவிப்பு அசல் பி.வா.சா.ஆ.4 ஆகவும், ச.எண்.130-க்கான புல வரைபடம் கணினி நகல் பி.வா.சா.ஆ.5 ஆகவும், கோவில் வரவு செலவு கணக்கு புத்தகங்கள் அசல் (4 எண்ணம்) பி.வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**8. வாதி தரப்பு வாதம்:-**

**8.1.** வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில்,

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:18:16 +0530

இவ்வழக்கானது பிரதிவாதிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளை பத்திர எண்.1/2015 மற்றும் 3533/2015-ஆகிய ஆவணங்கள் இவ்வழக்கு வாதியான கோவில் நிர்வாகத்தையும், வழிபாட்டு முறைகளையும் கட்டுப்படுத்தாது எனவும், மேற்படி ஆவணங்கள் அடிமுதலே செல்லாது என விளம்புகை பரிகாரம் கேட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும்,

**8.2.** மேற்படி பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள அறக்கட்டளை சொத்தானது காசிநாதபுரம் ஸ்ரீவைகுண்டம் சுடலைமாடசாமி கோவில் நலனுக்காக மேற்படி கோவிலின் பெயரில் 9 குடும்பங்களால் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் வாங்கப்பட்டது என்றும், மேற்படி சங்கதியானது பிரதிவாதியால் வாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையின் போது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும்,

**8.3.** கடந்த 2018-ம் ஆண்டு மேற்படி 9 குடும்பத்தினருக்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக வட்டாட்சியர் முன்னிலையில் நடைபெற்ற சமாதான உடன்படிக்கையின் படி வாதி கோவிலின் கொடைவிழாவானது 1-ம் பிரதிவாதி மற்றும் அவரைச் சார்ந்தவர்கள் பங்குனி 3-வது செவ்வாய் அன்றும், 1-ம் பிரதிவாதி வகையறாவைத் தவிர மற்ற தரப்பினர்களால் ஆவணி மாதம் கடைசி வெள்ளி அன்று கொடைவிழா நடத்தி கொள்வதாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், மேற்படி சமாதான உடன்படிக்கை மற்றும் வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 ஆகிய ஆவணங்களில் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்ட இரண்டு அறக்கட்டளை ஆவணங்களும் ரத்து செய்யப்பட வேண்டும் என்று வாதி மற்றும் 1-ம் பிரதிவாதிகளின் தரப்பினர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும்,

**8.4.** மேற்படி ஆவணங்களின் படி கொடைவிழா நடைபெற்று வருகிற நிலையில், வழக்கு பிரதிவாதிகள் மேற்படி பதிவு செய்யப்ப்டட இரண்டு அறக்கட்டளை பத்திரங்களை

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:18:28 +0530

ரத்து செய்யாமலும் மேற்படி அறக்கட்டளை பத்திரத்தின் அடிப்படையில் வாதி கோவிலின் பெயரில் உள்ள மின்கட்டண இணைப்பை அறக்கட்டளையின் பெயரில் பெயர் மாற்றம் செய்து அறக்கட்டளையின் வங்கி கணக்கில் இருந்து மின் கட்டணங்களை செலுத்தி வருகிறார் என்றும், மேலும் வாதி கோவிலின் பெயரில் உள்ள பட்டாவினை அறக்கட்டளையின் பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்கள் என்றும்,

**8.5.** அதுமட்டுமல்லாமல் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி வாதி கோவிலின் சொத்து சம்பந்தமாக வேறு எந்த நபரும் உரிமை மாற்றம் செய்யக்கூடாது என வா.சா.ஆ.11 தடங்கல் மனு கொடுத்துள்ளார் எனவும், அதனடிப்படையில் வில்லங்க சான்றிதழில் வாதி கோவிலின் சொத்தானது அறக்கட்டளையின் சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றும், இதன்மூலம் 1-ம் பிரதிவாதி வாதி கோவிலின் சொத்துக்களை உரிமை மாற்றம் செய்யும் வேலைகளில் ஈடுபட்டுள்ளதால் 1-ம் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளை ஆவண எண்.1/2015 மற்றும் ஆவண எண்.3533/2015 ஆகியவை வாதி கோவிலின் நிர்வாகத்தையும், வழிபாட்டு நடைமுறைகளையும் கட்டுப்படுத்தாது என்றும், மேற்படி ஆவணங்கள் அடிமுதலே செல்லாது என்றும், விளம்புகை கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், வாதியின் வழக்கானது தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது எனவும், எனவே, வாதியின் வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்று வாதிட்டார்.

**9. 1-ம் பிரதிவாதி தரப்பு வாதம்:-**

**9.1.** 1-ம் பிரதிவாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கானது காசிநாதபுரம் ஸ்ரீவைகுண்டம் சுடலைமாடசாமி கோவிலின் சார்பாக அதன் தர்மகர்த்தாவான செந்தில்நாதன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பிராதில்

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:18:42 +0530

குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி செந்தில்நாதன் வாதி கோவிலின் தர்மகர்த்தா என்பதற்கான எவ்வித ஆவணங்களும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், வாதி கோவிலின் மற்ற நபர்களிடமிருந்து ஒப்புகை பெற்றதாகவோ, அல்லது உரிமையியல் சட்டம் கட்டளை 1 விதி 8-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதாகவோ நிரூபிக்கப்படவில்லை. இந்நிலையில், வாதி கோவிலின் சார்பாக செந்தில்நாதன் என்பவருக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்குரிமை இல்லை என்றும், எனவே, இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும்,

**9.2.** மேலும், வாதியின் வழக்குப்படி மேற்படி வாதி கோவிலின் பெயரில் உள்ள சொத்தானது 1-ம் பிரதிவாதியின் மூதாதையரால் வாங்கப்பட்டது என்றும், மேற்படி சொத்தானது அரசு புறம்போக்கு நிலம் என்றும், மேற்படி சொத்திற்கு வாதி கோவில் பெயரில் பட்டா எதுவும் இல்லை என்றும், அவ்வாறான நிலையில் அதனை பெயர் மாற்றம் செய்ய 1-ம் பிரதிவாதி மனு கொடுத்ததாக குறிப்பிட்டுள்ள வாதியின் வழக்கானது உண்மைக்கு புறம்பானது என்றும்,

**9.3.** வாதி பிராதில் கூறியுள்ள படி வாதி கோவில் சம்பந்தமான கொடை விழா குறித்து பிரச்சனை ஏற்பட்ட நிலையில், அதற்கான சமாதான கூட்டமானது 14.02.2018-ம் தேதியன்று தான் நடைபெற்றது என்பது வா.சா.ஆ.4-ன் மூலமாக தெரிய வருகிற நிலையில், இவ்வழக்கு 1-ம் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் அறக்கட்டளை ஆவணங்கள் இரண்டும் 2015-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது என்றும், அவை கோவில் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டதே தவிர வாதி குறிப்பிட்டுள்ளதை போல் வேறு எந்தவித நடவடிக்கைகளுக்காவும் ஏற்படுத்தப்படவில்லை என்றும், எனவே வாதியின் வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று வாதிட்டார்.

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:18:54 +0530

**<u>தீர்வு</u>** :-

**10.1.** இவ்வழக்கில் வனையப்பட்டுள்ள எழுவினாக்களுக்கு தீர்வு காண்பதற்கு முன்பாக 1-ம் பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், வழக்கு வாதியான கோவிலின் சார்பாக மேற்படி வாதி கோவிலின் தர்மகர்த்தா என்று திரு.செந்தில்நாதன் என்பவர் குறிப்பிடப்பட்டுள்ளார். செந்திநாதன் என்பவர் வாதி கோவிலின் தர்மகர்த்தா இல்லை என்றும், அவர் அதனை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே, வாதி கோவிலின் தர்மகர்த்தா என்ற நிலையில் செந்தில்நாதன் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று குறிப்பிட்டுள்ள நிலையில், அதனை குறித்து முதலில் ஆராய்வது இன்றியமையாததாகும்.

**10.2.** இந்நீதிமன்றத்தில் காசிநாதபுரம் ஸ்ரீவைகுண்டம் சுடலைமாடசாமி கோவில் சார்பாக அதன் தற்போதைய தர்மகர்த்தா என்ற நிலையில் செந்தில்நாதன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கானது தாக்கல் செய்த வகையில் நிலைக்கத்தக்கதா? என்பது குறித்து பரிசீலனை செய்கையில், மேற்படி வாதி கோவிலானது வாதியின் வழக்குப்படி காசிநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த பொன்பெருமாள் நாடார் குடும்பம், குத்தாலிங்க நாடார் குடும்பம், கசமுத்து நாடார் குடும்பம், வைரக்கண் நாடார் குடும்பம், மாடசாமி நாடார் குடும்பம், வெள்ளைகாரன் என்ற சுடலையாண்டி நாடார் குடும்பம், அய்யாதுரை என்ற அப்பாதுரை நாடார் குடும்பம், மாடக்கண் நாடார் குடும்பம் மற்றும் கசமுத்து நாடார் குடும்பம் ஆகிய 9 குடும்பத்தினரால் உருவாக்கப்பட்டதாகும். மேற்படி பொன்பெருமாள் நாடார் குடும்பமானது தற்போது புலமாடநாடார் குடும்பம் என்று அழைக்கப்படுகிறது.

**10.3.** மேற்படி சங்கதி குறித்து 1-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:19:08 +0530

எதிர்வழக்குரையில், பத்தி 10-ல் வாதி கோவிலானது 1-ம் பிரதிவாதியின் மூதாதையரால் நான்கு தலைமுறைக்கு முன்னரே நிர்மானிக்கப்பட்டு, இரண்டு தலைமுறைக்கு முன்னர் கோவில் கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டு நாளது தேதி வரையில் 1-ம் பிரதிவாதியின் குடும்பத்தை சார்ந்தவர்களே நிர்வாகிகளாக இருந்து கோவில் நிர்வாகத்தினை செவ்வனே நடத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

**10.4.** வாதி கோவிலானது ஏற்படுத்தப்பட்ட விதம் குறித்து வாதி மற்றும் 1-ம் பிரதிவாதிக்கு இடையே வெவ்வேறு சங்கதிகள் பிராது மற்றும் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நிலையில், அது குறித்து சாட்சியங்களை ஆராயும் போது, பி.வா.சா.1 ஆன 1-ம் பிரதிவாதி வாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையின் போது,

> "**காசிநாதபுரம் ஊரில் பொன்பெருமாள் நாடார் குடும்பம், குத்தாலிங்க நாடார் குடும்பம், கசமுத்து நாடார் குடும்பம், வைரக்கண் நாடார் குடும்பம், மாடசாமி நாடார் குடும்பம், வெள்ளைகாரன் என்ற சுடலையாண்டி நாடார் குடும்பம், அய்யாதுரை என்ற அப்பாதுரை நாடார் குடும்பம், மாடக்கண் நாடார் குடும்பம் மற்றும் கசமுத்து நாடார் குடும்பம் ஆகிய குடும்பங்களின் வாரிசுகள் தான் தாவா கோவிலின் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான்.**" என்றும், மேலும்,
>
> "**கோவிலில் இரண்டு பிரிவுகள் ஏற்பட்ட பின்னரும் மேற்படி நாட்டாமை தங்கவேல் எங்கள் தரப்பு நிர்வாகியாக இருந்தார் என்றால் சரிதான்**." மேலும்
>
> "**அந்த காலக்கட்டத்தில் மேற்படி நாட்டாமை தங்கவேலின் மகனான ராமர் என்பவர் தான் எங்கள் தரப்பு சார்பாக கோவில் நிர்வாகத்தை கவனித்து வந்தார். தற்போது மேற்படி ராமருடன் நான் சுரேஷ் ஆகியோரும் நிர்வாகம் செய்து வருகிறோம். நாட்டாமை தங்கவேல்**

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:19:22 +0530

**உடல்நிலை சரியில்லாமல் இருந்ததிலிருந்தே நாங்கள் மூவர் தான் எங்கள் தரப்பு நிர்வாகிகளாக செயல்பட்டு வந்தோம்**" என்று சாட்சியமளித்துள்ளார்.

**10.5.** பி.வா.சா.1/1-ம் பிரதிவாதி மேலும் தனது குறுக்கு விசாரணையில், "**செந்தில்நாதன், முத்துவேல், ராஜேந்திரன், நாராயணன், பரமசிவன் ஆகியோர் மற்றொரு பிரிவை சார்ந்தவர்கள். மேற்படியார்கள் குத்தாலிங்க நாடார், கசமுத்து நாடார், மற்றொரு கசமுத்து நாடார், வைரக்கண் நாடார் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். நான் புலமாடன் குடும்பத்தைச் சார்ந்தவன் ஆவேன்.**" என்று சாட்சியமளித்துள்ளார்.

**10.6.** மேற்படி பி.வா.சா.1/1-ம் பிரதிவாதியின் சாட்சியத்திலிருந்து வாதி கோவிலானது பிராதில் குறிப்பிட்டுள்ளபடி 9 குடும்ப வகையறாக்களை சேர்ந்தவர்களால் நிறுவப்பட்டது என்பதும், மேற்படி 9 குடும்பத்தைச்சார்ந்தவர்கள் தற்போது இரண்டு பிரிவுகளாக உள்ளனர் என்பதும், மேற்படி இரண்டு பிரிவுகளில் ஒரு பிரிவினை 1-ம் பிரதிவாதி மற்றும் அவருடன் மற்ற நபர்களும், மற்றொரு பிரிவினை செந்தில்நாதன் மற்றும் அவரைச் சார்ந்தவர்களும் முன்னின்று வாதி கோவிலின் கொடை விழாவினை நடத்தி நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்பது தெளிவாக புலனாகிறது.

**10.7.** இந்நிலையில், 1-ம் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளையின் மூலம் வாதி கோவிலின் சொத்துக்களில் பெயர்மாற்றம் உள்ளிட்டவை செய்யப்படுவதால் அவற்றை தடுக்க வேண்டி மேற்படி இரண்டு பிரிவுகளில், ஒரு பிரிவில் உள்ள செந்தில்நாதன் என்பவரால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:19:38 +0530

**10.8.** மேற்படி செந்தில்நாதன் வாதி கோவிலின் தர்மகர்த்தா என்பதை காட்டுவதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யாத நிலையில், இவ்வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்ற 1-ம் பிரதிவாதி வழக்கறிஞரின் வாதத்தின் படி பார்க்கும்போது, செந்தில்நாதன் என்பவர் வாதி கோவிலின் தர்மகர்த்தா என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அவரும் மேற்படி வாதி கோவிலின் 9 குடும்ப நிர்வாகிகளில் ஒருவர் என்பது மேலேகண்ட பரிசீலனைகளின் அடிப்படையில் தெரிய வருகின்ற போது அவர் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது வாதி கோவிலின் நிர்வாகி என்ற முறையில் நிலைக்கத்தக்கது என்றும் அவருக்கு வழக்கை தாக்கல் செய்ய வழக்குரிமை உள்ளது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**எழுவினா 1 மற்றும் 2 :-**

**11.1.** இவ்வழக்கு தாக்கல் செய்த வகையில் நிலைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ள நிலையில், இவ்வழக்கில் வனையப்பட்டுள்ள 1-வது மற்றும் 2-வது எழுவினாக்களான ஆலங்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆவண எண்.1/2015 மற்றும் ஆவண எண்.3533/2015-ஐ பொறுத்து வாதி கேட்கும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பது குறித்து ஆராய்கையில்,

**11.2.** வாதியின் வழக்குப்படி வாதி கோவிலானது 9 குடும்பத்தைச் சார்ந்தவர்களால் நிரூவப்பட்டுள்ளது என்றும், மேற்படி 9 குடும்ப நபர்களுக்குள் ஏற்பட்ட பிரிவினை காரணமாக மேற்படி 9 குடும்ப நபர்களும் இரண்டு பிரிவுகளாக பிரிந்து மேற்படி 2 பிரிவுகளில் ஒரு பிரிவானது செந்தில்நாதன் மற்றும் அவரை சார்ந்தவர்களாலும், மற்றொரு பிரிவானது 1-ம் பிரதிவாதி மற்றும் அவரை சார்ந்தவர்களாலும் வாதி கோவிலின் கொடைவிழா மற்றும் நிர்வாகத்தினை நடத்தி வருகிறார்கள் என்பது வாதி மற்றும் 1-ம் பிரதிவாதியின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளதாக ஏற்கனவே இந்நீதிமன்றம்

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:19:50 +0530

முடிவு செய்துள்ளது.

**11.3.** இந்நிலையில், வாதி கோவில் சார்பாக பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் புதுப்பட்டி கிராமம்-1-ல் சர்வே எண்.130/10-ல் உள்ள நிலங்கள் மேற்படி 9 குடும்பத்தாரால் கிரையம் வாங்கப்பட்டு வாதி கோவிலின் பெயரில் வா.சா.ஆ.1 நத்தம் நிலவரி தூய அடங்கல் பதிவேடு மற்றும் மின் இணைப்பு ஆகியவை ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

**11.4.** மேற்படி கிரையம் வாங்கப்பட்ட சொத்தானது கோவிலின் பெயரில் இருந்து வந்துள்ள நிலையில், 1-ம் பிரதிவாதியானவர் கடந்த 28.01.2015-ம் தேதியன்று காசிநாதபுரம் ஸ்ரீவைகுண்டம் சுடலை ஆண்டவர் கோவில் டிரஸ்ட் என்ற பெயரில் அறக்கட்டளையை தொடங்கி மேற்படி அறக்கட்டளையை வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலமும் பதிவு செய்துள்ளார். மேற்படி ஆவணத்தில் 1-ம் பிரதிவாதி அவருடன் சேர்ந்து 11 நபர்கள் நிர்வாக அறங்காவலர்களாக இடம் பெற்றுள்ளனர். மேற்படி ஆவணத்தில் அறக்கட்டளையின் அலுவலக முகவரியாக கதவு எண்.7/146 ஏ தெற்கு தெரு காசிநாதபுரம் புதுப்பட்டி அஞ்சல் திருநெல்வேலி மாவட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**11.5.** அதனைத்தொடர்ந்து மேற்படி 1-ம் பிரதிவாதியால் மீண்டும் 02.07.2015-ம் தேதியன்று காசிநாதபுரம் சுடலைமாடான் கோவில் டிரஸ்ட் என்ற பெயரில் மற்றொரு அறக்கட்டளை துவங்கப்பட்டு மேற்படி அறக்கட்டளையானது ஆவண எண்.3533/2015-ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், மேற்படி அறக்கட்டளையின் அறங்காவலாராக 1-ம் பிரதிவாதியின் பெயர் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

**11.6.** மேலும், மேற்படி ஆவணத்தில் அறக்கட்டளையின் அலவலக முகவரியாக கதவு

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:20:04 +0530

எண்.5/300 துணை சுகாதார நிலையம் அருகில் காசிநாதபுரம், புதுப்பட்டி அஞ்சல், திருநெல்வேலி மாவட்டம் என்றும், அறக்கட்டளையின் சொத்தாக புதுப்பட்டி கிராமம் காசிநாதபுரம் குடியிருப்பில் நத்தம் சர்வே எண்.130/10 ஹெக்டேர் 0.06.00-க்கு செண்ட் 15 என்று வாதி கோவில் சொத்தும், வாதி கோவில் பெயரில் உள்ள மின் இணைப்பும் மற்றும் பஞ்சாயத்து குடிநீர் இணைப்பும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**11.7.** மேற்படி ஆவண எண்.3533/2015-ல் நத்தம் புல எண்.130/10-ல் உள்ள கோவிலானது புலமாடநாடார் தகப்பனார் பெயர் புலசுப்பு நாடார், சுடலைமுத்து நாடார் தகப்பனார் பெயர் மாடசாமி நாடார், மு.அப்பாதுரை நாடார் தகப்பனார் பெயர் முத்தையா நாடார் ஆகியோர்களால் நிரூவப்பட்டதாகவும், மேற்படி கோவிலின் நிர்வாகமானது மேற்படி மூன்று நபர்களின் குடும்பத்தாரால் நிர்வாகிக்கப்பட்டு வந்ததாகவும், சர்வே எண்.130/10-ல் கண்டுள்ள நிலமானது மேற்படி நபர்களால் கிரையம் வாங்கப்பட்டதாகவும், அவர்களின் காலத்திற்கு பிறகு தற்போது மேற்படி கோவில் மற்றும் நிலத்தின் பராமரிப்பு மற்றும் நிர்வாகத்தினை 1-ம் பிரதிவாதி நடத்தி வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**11.8.** மேற்படி வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களில் கண்டுள்ள சரத்துக்களின் படி பார்க்கும் போது வாதி கோவிலானது 1-ம் பிரதிவாதியின் மூதாதையர்களால் நிறுவப்பட்டு அவர்களால் மேற்படி சர்வே எண்.130/10-ல் உள்ள நிலங்கள் வாங்கப்பட்டு, வாதி கோவில் நிறுவப்பட்டது முதல் தற்போது வரை 1-ம் பிரதிவாதியின் மூதாதையர்கள் மற்றும் அன்னாரது வாரிசுகளால் வாதி கோவில் நிர்வாகமானது நடத்தப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பது புலனாகிறது.

**11.9.** வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3-ல் உள்ள கண்டுள்ள சரத்துக்களானது பிராதில் கண்டுள்ள சரத்துக்களுக்கும் 1-ம் பிரதிவாதி வாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையின் போது ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளுக்கும் முரணாக உள்ளது என்பது

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:20:17 +0530

துலங்குகிறது. இது குறித்து 1-ம் பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, மேற்படி அறக்கட்டளையானது கோவிலின் நன்மைகாக தான் ஏற்படுத்தப்பட்டது என்றும், கோவிலின் சொத்துக்களை பெயர் மாற்றம் செய்வது தங்களது குறிக்கோள் இல்லை என்று வாதிட்டார்.

**11.10.** 1-ம் பிரதிவாதியின் வழக்கறிஞரின் மேற்படி வாதம் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களில் கண்டுள்ள சரத்துக்களுக்கு நேர்மாறாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், அது குறித்து பி.வா.சா.2-ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் அவர் வாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையின் போது,

> "**வழக்கு கோவிலுக்கு பக்தர்கள் பூஜையின் போது செலுத்தும் காணிக்கைகளை நாங்கள் மேற்படி வங்கி கணக்கில் போட்டு வைத்துள்ளோம்**" என்றும்,
>
> "**சென்ற ஆண்டு மார்ச் மாதத்தில் கோவில் கொடையின் போது ரூ.2,00,000/-க்கும் அதிகமாக வரிபணம் வந்தது. மேற்படி பணத்தை டிரஸ்ட் கணக்கில் வரவு வைத்து பராமரித்து வருகிறோம்**" என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**11.11.** மேற்படி சாட்சியத்திலிருந்து கோவிலுக்கு வரக்கூடிய வருமானங்கள் அனைத்தும் 1-ம் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்டுள்ள அறக்கட்டளையின் சார்பாக தொடங்கப்பட்டுள்ள வங்கி கணக்குகளில் செலுத்தப்படுகிறது என்பதும், 1-ம் பிரதிவாதி மேற்படி பதிவு செய்யப்பட்ட வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களின் அடிப்படையில் வாதி கோவிலின் பெயரில் உள்ள மின் இணைப்பினை அறக்கட்டளையின் பெயரில் மாற்றுவதற்கு மனு அளித்துள்ளார் என்பதும், மேற்படி மனுவின் அடிப்படையில் மின் இணைப்பானது அறக்கட்டளையின் பெயரில் மாற்றப்பட்டு அவற்றை 1-ம் பிரதிவாதியின்

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:20:29 +0530

செல்போன் எண் இணைக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்படி வாதி கோவிலுக்கான மின் கட்டணமானது பி.வா.சா.ஆ.2 அறக்கட்டளை கணக்கு மூலமாக செலுத்தி வரப்படுகிறது என்பதும், 1 மற்றும் 2-ம் பிரதிவாதிகள் வாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையின் போது ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

**11.12.** மேலும், மேற்படி 1-ம் பிரதிவாதி வாதி கோவில் மற்றும் சர்வே எண்.130/10-ல் கண்டுள்ள சொத்தானது 1-ம் பிரதிவாதியின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றும், அதனை வேறு நபர்களுக்கு பத்திரம் பதிவு செய்யக்கூடாது என்றும், அறக்கட்டளையின் சார்பாக சார்பதிவாளர் அலுவலகத்தில் வா.சா.ஆ.10 மனு கொடுத்துள்ளார்.

**11.13.** மேற்படி 1-ம் பிரதிவாதியின் செயல்களானது வாதி கோவில் மற்றும் வாதி கோவிலுக்கு சொந்தமான சர்வே எண்.130/10-ல் உள்ள சொத்து ஆகியவற்றை 1-ம் பிரதிவாதியின் மூதாதையார்களுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்று பிரஸ்தாபிக்கப்படுவது போல் தெரிகிறது எனவும், மேலும், வா.சா.ஆ.1, வா.சா.ஆ.3, வா.சா.ஆ.10, பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.4 ஆகிய ஆவணங்களின் வாயிலாக வாதி கோவில் மற்றும் அதன் சொத்தினை தனது அறக்கட்டளையின் பெயரில் மாற்ற முயற்சிகள் மேற்கொள்கிறார்கள் எனவும் வாதிட்ட வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞரின் வாதத்தில் நியாயம் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11.14.** மேலே கண்ட பரிசீலனையின் அடிப்படையில் பார்க்கும் போது வாதி கோவில் மற்றும் அதன் சொத்துக்களை 1-ம் பிரதிவாதி வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 அறக்கட்டளைகளின் மூலம் தன்னுடைய சொந்த கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார் என்பது தெளிவாக புலனாவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏற்கனவே விவாதித்துள்ள படி வாதியின் கோவிலானது 9 குடும்ப

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:20:43 +0530

வகையறாக்களால் நிறுவப்பட்டது என்பதும், சர்வே எண்.130/10-ல் உள்ள சொத்தானது மேற்படி 9 குடும்பத்தாரல் தான் வாங்கப்பட்டுள்ளது என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை 1-ம் பிரதிவாதி தன்னுடைய மூதாதையரால் மேற்படி கோவில் நிறுவப்பட்டதாகவும், சொத்துக்கள் வாங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டு பதிவிட்டுள்ள வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**11.15.** அதுமட்டுமல்லாமல் மேற்படி வா.சா.ஆ-2 மற்றும் வா.சா.ஆ.3 ஆகிய ஆவணங்களின் மூலம் ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளையில் 1-ம் பிரதிவாதியின் குடும்ப வகையாறாக்களை சார்ந்த நபர்கள் மட்டுமே அறங்காவலராக உள்ளனர் என்பது தெரிய வருகிறது. ஏற்கனவே வாதி கோவிலானது 9 குடும்ப வகையறாவால் நிர்வகிக்கப்பட்டு வருகிற நிலையில், மேற்படியார்களை தவிர்த்து விட்டு ஒரு குடும்ப வகையறாவை சார்ந்தவர் மட்டும் ஏற்படுத்தியுள்ள வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆகிய ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கத்தல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**11.16.** எனவே, இவ்வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரமான 28.01.2015-ம் தேதியன்று 4-ம் பிரதிவாதி அலுவலகத்தில் காசிநாதபுரம் ஸ்ரீவைகுண்டம் சுடலை ஆண்டவர் கோவில் டிரஸ்ட் என்று பதிவு செய்துள்ள ஆவண எண்.1/2015-ஆனது வாதி கோவில் நிர்வாகத்தையோ, அதன் அசையும், அசையா சொத்துக்களையோ வழிபாடு முறைகளையோ எந்த வகையிலும் கட்டுப்படுத்தக்கூடியதல்ல மற்றும் அடி முதலே செல்லாது என்றும், அதனை தொடர்ந்து 1-ம் பிரதிவாதி 02.07.2015-ம் தேதியன்று 4-ம் பிரதிவாதி அலுவலகத்தில் காசிநாதபுரம் சுடலைமாடன் கோவில் டிரஸ்ட் என்று பதிவு செய்துள்ள ஆவண எண்.3533/2015-ஆனது வாதி கோவில் நிர்வாகத்தையோ, அதன் அசையும், அசையா சொத்துக்களையோ வழிபாடு முறைகளையோ எந்த வகையிலும்

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:20:56 +0530

கட்டுப்படுத்தக்கூடியதல்ல மற்றும் அடி முதலே செல்லாது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து எழுவினா1 மற்றும் 2-க்கு தீர்வு காணப்படுகிறது.

**எழுவினா 3 :-**

**12.** இந்த வழக்கில் மேலே கண்ட எழுவினா 1 மற்றும் 2-ல் விரிவாக தீர்வு காணப்பட்டுள்ளதாலும், இந்த வழக்கின் தன்மையின் அடிப்படையிலும் தரப்பினர்களுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 3-க்கு விடை காணப்படுகிறது.

**முடிவாக வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கானது அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**அ) 1-ம் பிரதிவாதி 28.01.2015-ம் தேதியன்று 4-ம் பிரதிவாதி அலுவலகத்தில் காசிநாதபுரம் ஸ்ரீவைகுண்டம் சுடலை ஆண்டவர் கோவில் டிரஸ்ட் என்று பதிவு செய்துள்ள ஆவண எண்.1/2015-ஆனது வாதி கோவில் நிர்வாகத்தையோ, அதன் அசையும், அசையா சொத்துக்களையோ வழிபாடு முறைகளையோ எந்த வகையிலும் கட்டுப்படுத்தக்கூடியதல்ல மற்றும் அடி முதலே செல்லாது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் வழங்கியும்,**

**ஆ) 1-ம் பிரதிவாதி 02.07.2015-ம் தேதியன்று 4-ம் பிரதிவாதி அலுவலகத்தில் காசிநாதபுரம் சுடலைமாடன் கோவில் டிரஸ்ட் என்று பதிவு செய்துள்ள ஆவண எண்.3533/2015-ஆனது வாதி கோவில் நிர்வாகத்தையோ, அதன் அசையும், அசையா சொத்துக்களையோ வழிபாடு முறைகளையோ எந்த வகையிலும் கட்டுப்படுத்தக்கூடியதல்ல மற்றும் அடி முதலே செல்லாது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**இ) செலவுத்தொகை இல்லை.**

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:21:07 +0530

TNTS0C0011892022

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 06-ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:21:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

ஆலங்குளம்

**வாதி தரப்பு சாட்சிகள்**:-

வா.சா-1 - செந்தில்நாதன் (வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**:--

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ-1 | -- | சர்வே எண்.130/10-க்கான நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேடு (உண்மை நகல்) |
| வா.சா.ஆ-2 | 28.01.2015 | Trust Deed (உண்மை நகல்) |
| வா.சா.ஆ-3 | 02.07.2015 | பதிவு செய்யப்பட்ட ஆவணம் (சான்றிட்ட நகல்) |
| வா.சா.ஆ-4 | 14.02.2018 | ஆலங்குளம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடந்த சமாதான கூட்ட தீர்மானம் (உண்மை நகல்) |
| வா.சா.ஆ-5 | -- | விசாரணை அறிவிப்பு (நகல்) |
| வா.சா.ஆ-6 | -- | புல எண்.130/10-க்கு வழங்கப்பட்டுள்ள பட்டா (உண்மை நகல்) |
| வா.சா.ஆ.7 | 25.09.2019 | உத்தரவு (கணினி நகல்) |
| வா.சா.ஆ.8 | 03.02.2018 | பதிவு செய்யப்படாத ஒப்பந்தம் (அசல்) |
| வா.சா.ஆ.9 | 03.02.2018 | பதிவு செய்யப்படாத ஒப்பந்தம் (அசல்) |

TNTS0C0011892022

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.10 | 26.05.2015 | 1-ம் பிரதிவாதி ஆலங்குளம் சார்பதிவாளருக்கு கொடுத்த தடங்கல் மனுக்கள் (நகல்கள்) |
| வா.சா.ஆ.11 | 20.11.2025 | வில்லங்க சான்றிதழ் (கணினி நகல்) |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்**:-

பி.வா.சா-1 - கண்ணன் (1-ம் பிரதிவாதி)

பி.வா.சா-2 - சுரேஷ்

பி.வா.சா-3 - கோயில் செல்வராஜ்

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**:-

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ-1 | -- | ச.எண்.130/10-க்கு வழங்கப்பட்டுள்ள நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேடு( உண்மை நகல்) |
| பி.வா.சா.ஆ-2 | 02.07.2015 | அறக்கட்டளை பதிவு ஆவணம் (அசல்) |
| பி.வா.சா.ஆ-3 | -- | மின் இணைப்பு ரசீதுகள் (2 எண்ணம்) (அசல்) |
| பி.வா.சா.ஆ-4 | 2001 | தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து ஜீலை மாதம் அனுபப்பட்ட அறிவிப்பு (அசல்) |
| பி.வா.சா.ஆ-5 | -- | ச.எண்.130-க்கான புல வரைபடம் (கணினி நகல்) |
| பி.வா.சா.ஆ.6 | -- | கோவில் வரவு செலவு கணக்கு புத்தகங்கள் (அசல்) (4 எண்ணம்) |

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.08.06 19:21:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

ஆலங்குளம்.

TNTS0C0011892022

மா.உ.நீ. ஆலங்குளம்

அ.வ.எண்.531/2022

வரைவு/நேரிய தீர்ப்புரை

நாள்: 06.08.2026